# ஆத்மஜோதி



'கோம்பை சுவாமிகள்'

# ஆத்ம ஜோதி.

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

...சுத்தானந்தர்...

சோதி 11 சுடர் 6. விளம்பி ஹூ சித்திரை 1-4-59.


## - பொருளடக்கம் -


| | | |
|---|---|---|
| பேரின்பத் தெள்ளமுது | ... | 161 |
| அரவிந்தரின் அறிவுரை | ... | 162 |
| மாகாத் மாக்களும் ஞானிகளும் | ... | 163 |
| முப்பொருள் தத்துவம் | ... | 165 |
| பொன் மொழிகள் | ... | 168 |
| ஸ்ரீமத் கோம்பை சுவாமிகள் | ... | 169 |
| யோக ஆசனங்கள் | ... | 177 |
| நாம் காணும் சைதன்யர் | ... | 181 |
| நடராஜா ஓம் | ... | 184 |
| அபேதமும் ஆனந்தமும் | ... | 185 |
| கடவுளைச் சரண் புகுதல் | ... | 190 |
| கபீர் பஜன் | ... | 192 |
| சுவாமி இராமதாசன் | ... | 193 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள்சந்தா ரூ. 75-00 வருடசந்தா ரூ. 3-00
— தனிப்பிரதி சதம் -30 —

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.
பதிப்பாசிரியர்: நா. முத்தையா.

ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி (சிலோன்)


# பேரின்பத் தெள்ளமுது.

[மகரிஷி சுத்தானந்தர்]

———

எல்லாரு மின்புறுத லென்னின்ப மாக்கினை
எனதியா னென்ப தறவே
என்னுட் கலந்தவா றெங்கணும் விளங்கினை
யியல்பா யிருந்த படியே,
தொல்லுலக முன்னுணை யாடலாய்த் தோற்றினை
தோற்றியதை மாற்றி மாற்றி
தொழில்க ளெண்பதுகோடி சோர்வற இயற்றியுந்
தொழிலறு சமர்த்த னுனய்;
சொல்லரிய துரியமெய் விண்ணொளிக் கப்பால்
துலங்கிடும் வெட்டவெளியே
துதிக்கத் துதிக்கத் திதிக்குமுத் தமிழெனச்
சொக்குஞ் சுகப் பெருக்கே;
இல்லையென் பாருளு மிருக்கிறே னீங்கென்னு
மெல்லையறு தில்லை யறிவே!
எச்சமய மும்பணிந் தேத்தரிய பொதுநடத்
தெந்தையே போற்றி போற்றி

18 இன்றுநே சித்தவர்கள் நாளையே வெருகுபோல்
இகல்வேட்டை யாடு முலகம்,
எமன்வரினும் இணையரேம் என்றென்று மன்புளோம்
என்றுருகு காதலாளர்
சென்றுண் டுறங்கிமன மொன்றென்று கொஞ்சியென்
செல்வச் சிறப்பின் வளமே
தேனினும் பாகினும் தித்திக்கும் இன்பமே
திருவே எனக் கலந்து
நின்றவர் செருக்குறு சினம்வர நிலைதவறி
நேர்பகை வராய்ப் பொருது வார்
நிறைகெட்டு மதிகெட்டு நெறிகெட் டலைவரிது
நீசவுல கத்தி னியல்பே
தொன்றுதொட் டிவ்வியலை நன்றுதேர்ந் துன்னையே
துணையாக நம்பி யுள்ளேன்
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே!

# அரவிந்தரின் அறிவுரை

நாம் கருத்திற்கொண்ட முழுமாற்றம் நிகழவேண்டுமாயின். எவ்வளவிற்கு நமது மனமும் இதயமும் இறைவனுக் கர்ப்பணம் செய்யப் படுகின்றனவோ அவ்வளவிற்கு நம் செயல்களும் வெளிப்பிரவிருத்திகளும் அர்ப்பணமாதல் அவசியமாம். செயல் புரியும் நமது திறமைகளை நமது மறைவில் நின்ற சீரியசக்தியினிடத்து ஒப்படைத்தலை ஏற்றுச் சமர்ப்பணத்தை படிப்படியாக நிறைவேற்றல் வேண்டும். நாம் செயல் புரிகிறோம். நாம் தொண்டாற்றுகிறோம் எனும் உணர்ச்சி அறவே அகலவேண்டும். பொருள்களின் புறத் தோற்றங்களில் மறைபட்டு நிற்கும் ஆண்டவனது இச்சை, தனக்குகந்தவகையிற் பெரிதும் நேரிடையாய் உபயோகப் படுத்துமாறு அவனது திருக்கரங்களில் அனைத்தையுமளித்தல் வேண்டும். திருவுளச் சம்மதமின்றியாதொரு செயலையும் புரியவியலாதாதலின், கரந்துநின்ற ஓர்சக்தியே நமது செயல்களைக் கூர்ந்துகவனித்துத் தடுத்தாளும் தலைவனும். அகந்தையிலமைந்த அறிவின்மையினின்றும், முரண்பாட்டினின்றும், நெறிக்குறைவினின்றும் உண்டாய இச்செயல்களின் முழுப்பொருளையும் முடிவான கருத்தையும் உணர்ந்தவன் அவன் ஒருவனே. நமது குறுகிய சீர்கெட்ட அகந்தை பற்றிய வாழ்க்கையும் செயலும், தற்போது நம்மை உள்ளீடாய்த் தாங்கிநிற்கும் உயரிய திவ்விய வாழ்க்கை, சங்கற்பம், சக்தி ஆகிய இவற்றின் பரந்தநேரான வெளிப்பாடாக முற்றிலும் மாற்றப்பெறல் வேண்டும் இவ்வுயரிய சங்கற்பமும் சக்தியும் இதுவரையிற்போல் மேல்நின்றே ஆதரித்து அனுமதித்துவரும் ஆற்றலாய் நிற்காமல், நம் உள் அறிவிலேயே பொருந்தி ஆளும் வகைசெய்தல் வேண்டும். தற்போது காந்தியங்கும் ஒரு, எல்லாமறிந்த ஆற்றலும் எல்லாம்வல்ல அறிவும் தமது தீர்க்கதிருஷ்டியில் கொண்ட உத்தேசமும் சாதிக்கும் முறையும் நமது வாயிலாய்த் திரிபற்று வெளிப்பாடாகும்வகையில் நம் சாதித்தல் வேண்டும்.

—※—

# மகாத்மாக்களும் - ஞானிகளும்

(ஆசிரியர்)

மனித சரித்திரம் மிகமிகப் பழமையானது, இச்சரித்திரத்தை ஊடுருவிப் பார்த்தால் மூவகை மனிதரைக் காணலாம். தான்மாத்திரம் வாழ்ந்தால் போதும் என்ற கொள்கையுடையவர்கள் ஒரு வகையினர். தன்னோடு தன்னைச் சேர்ந்தவர்களும் வாழ்ந்தால் போதும் என்ற கொள்கையுடையவர்கள் இன்னொரு வகையினர். உலகமெலாம் வாழவேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடையவர்கள் பிறிதொரு வகையினர்.

மூன்றாவது வகையினர் மனிதர்களுக்குள் மிக மிக உயர்ந்த தன்மையுடையவர்கள். இ வ ர் க ளே உலகின் மகாத்மாக்களும், ஞானிகளும், அவதாரங்களும், தீர்க்கதரிசிகளும், ஆவர். உலக வாழ்வில் இவர்களுடைய நோக்கம் மிகமதிப்பையுடையது. இவர்கள் உலகின்மீது புதுமையான வசீகர சக்தியைப் பரப்புகின்றார்கள். ஏனெனில் வாழ்க்கையில் குறுகியநோக்கத்தோடு வாழும்மக்கள், இம் மகாத்மக்களின் கம்பீரமான தோற்றத்தால் மயக்கப்பட்டுக் கவரப்படுகிறார்கள்,

ஆத்மாவை அறிந்தவர்கள் ஆத்மகணத்தைச் சேர்ந்தவர்களாவர் அவர்களே ஆத்மீகவீரர்கள் என்றும் அழைக்கப்படுகின்றார்கள். மற்றவர்களிலிருந்து இந்த ஆத்மீக வீரர்களிடம் அமைந்த விசேடபண்புகள் எவை? எல்லாப் பிராணிகளிலும் உயிர்களிலும் கொண்டுள்ள சமநோக்கினால் ஏற்படும் சுயநல வெறுப்பே அவர்கள் வாழ்வின் அடிப்படையாகும். அவர்கள் உலகின் நிலையாமையை நன்கு உணர்ந்தவர்கள். அழிவில்லாததும் பேரின்பமானதுமான நிலையை எப்போதும் உணர்ந்து கொண்டே இருப்பவர்கள். இந்த உடல் செக்கன்தோறும் இறந்துகொண்டே இருக்கிறதென்பதை நன்கு உணர்ந்தவர்கள்; இதனால், சாதாரண மனிதர்களை அச்சத்திற்குள்ளாக்கும் மரணபயத்திலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றிருக்கிறார்கள்.

இவர்களுடைய உபதேசங்கள் யாவும் ஆண்டவனைப்பற்றியனவாகவே இருக்கும். கீழ்த்தரமான எண்ணங்களினின்றும் நித்திய வாழ்வைப்பற்றிய உணர்வுக்கு மக்களை அழைத்துச் செல்கிறார்கள். அந்நிலையே அமரத்துவம் எனப்பெறும். அவர்கள் உபதேசங்கள் யாவற்றையும் ஒரு சொல்லில் அடக்கலாம், அது 'ஆண்டவன்' ஆகும். ஒன்றைப்பற்றியே திரும்பத்திரும்பக் கூறுவதில் அவர்கள் சலிப்படைவதில்லை.

வாழ்க்கை நித்தியமானது; அதாவது ஆத்மா என்றுமுள்ளது ஒவ்வோருயிரும் உண்மையாகவே தெய்விகம் வாய்ந்தவை; அதாவது இயல்பாகவே அழியா ஒளியும், இன்பமும் சாந்தியும் உடை; யவை. இவையே அவர்கள் அநுபூதிலிருந்த கிடைத்த அரிய மாணிக்கங்களாகும்.

பல்வேறு வகையான உயிர்த் தோற்றங்களிலும் ஒன்றிநிற்கும் அழிவில்லாததும் சர்வ வியாபகமானதுமான சத்துவப் பொருள் ஒன்றுண்டு, அதிலிருந்து வீசும் ஆத்மீகஒளி அவர்களிடம் எப்போதும் உண்டு. வாழ்வின் மாட்சிமையாகிய அந்நிலையை அடைவதன் பெருமையை மக்கட் கூட்டத்தினருக்குப் போதிக்கிருர்கள். மக்கள் விரும்பாவிட்டாலும் வலிந்து சென்று போதிக்கின்ருர்கள். அவர்களுடைய ஆத்மீக ஒளியிஞல் கவரப்பட்டு மக்கள் அவர்களைச் சுற்றிக் கூடுகின்ருர்கள். அவர்களைப் பின்பற்றுகிருர்கள். அவர்களின் அன்புகொண்டு போற்றிப்பணிகின்ருர்கள்.

அவர்களின் கூட்டுறவால் தமது பந்தநிலையை மக்கள் உணருகின்ருர்கள். அதஞல் அடிமைத்தளையிலிருந்து விடுதலை அடையவேண்டும். என்னும் ஆர்வம் உண்டாகிறது. அவ்வார்வத்திஞல் தெய்விக நிலைக்குத் தாமும் உயர்த்தப்படுகின்ருர்கள். மனிதவாழ்க்கையின் சரித்திரத்தின் எக்காலத்திலாவது நித்திய வாழ்வைப்பற்றி அறிந்த ஆசான் யாராவது இல்லாது இருந்ததில்லை. அவர்களின் அளவற்ற சக்தி மனிதனின் மிருக உணர்ச்சிகளை அடக்கிப் பரஸ்பர நேயம், சாந்தி, நல்லெண்ணம் என்பவை நிறைந்த உலகை ஏற்படுத்தும்.

இத்தகைய மகான்களுள் ஒருவராக வாழ்ந்து பல மக்களை ஆத்மீக வாழ்வில் ஈடேறச்செய்த கோம்பை சுவாமிகளுடைய திருமுகப் பொலிவோடு சித்திரைச்சுடர் வெளிவருகின்றது. புதுவருடத்தில் புதுவாழ்வு மலர ஞானி ஒருவருடைய தரிசனம் வழிகாட்டும் அல்லவா? ஆத்மஜோதி நேயர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்து உரித்தாகுக.

----

## பண்பாடு.

வீட்டைச்சுற்றிசுவர் எழுப்பவும் ஜன்னல்களை எல்லாம்வெளியில்லாமல் துணிவைத்து அடைக்கவும் நான் விரும்பமாட்டேன். சகல தேசத்துப் பண்பாடுகளும் என்வீட்டில் வீசுவதையே விரும்புகின்றேன். ஆஞல் வீசலாமேயன்றி என்னைக்காலை வாரி விட்டு விடலாகாது. நான் பிறர்வீட்டில்போய் அக்கிரமியாகவோ பிச்சைக்காரஞகவோ அடிமையாகவோ இருக்கமாட்டேன்.

—காந்தி.

உ

# முப்பொருள் தத்துவம்

(மாத்தளை—அருணேசர் எழுதியது)

மூன்று என்னும் எண்ணுக்குள் எத்தனையோ முக்கிய தத்துவங்களெல்லாம் அடங்கியுள்ளன அதில் அடங்காத தத்துவமே இல்லை எனலாம். உதாரணமாக இந்த உலகத்தையே எடுத்துக்கொள்வோம். அது இம்மூன்று என்னும் எண்ணுக்குள் தானே அடங்கியுள்ளது. அதனை ஈரேழு பதிஞலு உலகம் எனப் பகுத்துக் கூறப்பட்டாலும். அது மேல்-கீழ்-மத்தி என மூவுலகமாக மூன்றினுள் தானே அடக்கப்பட்டிருக்கிறது.

இந்த உலகமட்டுமென்ன? இதனைப் படைத்த இறைவனுங்கூட முத்தொழிலுடைய மும்மூர்த்தியாக அன்ருே விளங்குகின்ருர்! தாம் ஒருவரே என்ருலும் அவர் பிரமா. விஷ்ணு, சிவன், என்ற மூவகை நாமங்களுடன்-முறையே ஆக்கல், காத்தல். அழித்தல் என்னும் முத்தொழில்களை இயக்குபவராகப் பரிணமிக்கின்ருரே.

அதுமட்டுமா? அவ்விறைவன், ''ஓம்'' என்ற மூலமந்திரமாகிய பிரணவத்தின் உள்ளிருந்து அகர உகர, மகரங்களால் அ÷உ÷ம்) ஆக்கப்பட்டுத் திரிமூர்த்தித் திவ்விய சொரூப லட்சணங்களாகவும் விளங்குகின்ருர். அகரம் பிரமனுக்கிடமாகவும். உகரம் விஷ்ணுவுக்கு இடமாகவும், மகரம் சிவனுக்கு இடமாகவும் அமைந்துள்ள தத்துவத்தை இது குறிப்பிடுகின்றதெனப் பெரியோர் கூறியுள்ளனர்.

இன்னும் இம்மூன்றின் தத்துவப் பொருள் என்னென்ன வகைகளாகப் பரிணமித்துள்ளது என்பதையும் பார்ப்போம்.

கடவுளுக்கு ''ரூபம் உண்டு-இல்லை'' என்ற சந்தேகத்தை ஒழிப்பதற்காக அவரை ரூபி, அரூபி

ரூபா ரூபி. (அதாவது-ரூபமுடையவர், ரூபமில்லாதவர், ரூபமும் அருபமும் சேர்ந்து விளங்குபவர்) என்று அவரவர் பார்வையில் தோற்றக்கூடிய வெவ்வேறு உருவ பேதங்களை வெளிப்படுத்துவதும் இம்மூன்றின் தத்துவமே.

கடவுளின் வடிவாகக் கொள்ளப்பட்டுப் பூசிக்கப்படும் கொள்கைகூட—மூர்த்தி, தலம், தீர்த்தம், என்ற மூவகைப் பிரிவில் கடவுளின் வடிவாகக் கொண்டு பூசிக்கின்ற தத்துவத்தையே உள்ளடக்கியிருக்கின்றது.

நம் இந்துமத தத்துவங்களும் கடவுள் லட்சணம் ஆண்ம லட்சணம், மோட்ச லட்சணம், என்று மூன்ருகத்தான் இருக்கின்றன.

கடவுளின் தத்துவத்தை நன்கறிந்த ஞானிகள் அவரை சத். சித், ஆனந்தம் என்னும் மூன்று குணரூபங்களில் கண்டுள்ளனர். அதனுல்தான் அவ்விறைவனைச் சச்சிதானந்த ரூபி என உருவகப் படுத்திக் கூறப்பட்டுள்ளது.

முப்பொருளின் தத்துவமே கடவுள், உயிர். உலகம், என்ற உண்மைகள் அடங்கியுள்ளதை அந்த ஞானிகள் காட்டியுள்ளனர். இவற்றுக்கு நம் இலக்கண நூல்களில் குறிப்புச் சொற்களையும் அமைத்துக் காட்டியுள்ளனர். அவை உயிரெழுத்து, மெய்யெழுத்து ஆய்த எழுத்து என்ற மூன்றுக்குள் அடக்கப்பட்டு உயிரெழுத்து உயிரைக் குறிப்பதாகவும், மெய்யெழுத்து உலகத்தைக் குறிப்பதாகவும், ஆய்தமாகிய தனிநிலை கடவுளைக்குறிப்பதாகவும் கொள்ளப்பட்டுள்ளது. இப்பழந் தமிழ் வாய்ப்பாடுதான் வடமொழியில் பதி, பசு, பாசம் எனப்பட்டதும்.

சில ஞானிகள் கடவுளை அடி, நடு, முடியில்லாத அநாதி (ஆதி அந்தம் அற்றவர்) என்று, அந்த



மூன்று வரையறைக்குள் அடங்காதவர் என்பதைக் குறிப்பிடுகின்றனர்,

அக்கடவுளை வணங்கும் பக்தி முறையையும் மூவகையாகத்தான் பிரித்திருக்கிருர்கள். அவை உத்தம பக்தி, மத்திம பக்தி, அதம பக்தி, என்று மூன்று விதயானவையாம்,

அந்த மூன்றுவித பக்தி வணக்க முறைகளையும் கைக்கொண்டு நடக்கும்போதுகூட, அதற்கு முக்கரண சுத்தியைத்தான் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்கரணம் என்பது மனம், வாக்கு, காயம் என்ற மூன்று காரணங்களாம். அவை பரிசுத்தத்துடனே இருக்கவேண்டுமென்பதுதான் நியமிக்கப்பட்ட விதிமுறையாகும். மனத்தை தீய வழிகளில் செல்லவிடாமல் நல் வழிகளிலேயே செலுத்திக் கடவுளை மனதினுல் வணங்குவதை மனச் சுத்தம் என்றும்; வாயை அடக்கித் தீச்சொற்களைப் பேசாதிருத்தல்; வாயினுல் இறைவனை வாழ்த்தி வணங்குதல் ஆகியன வாக்குச் சுத்தம் என்றும்; காயம் எனப்படுகிற உடலினுல் பிறருக்கு நன்மையானவற்றைச் செய்தல், கடவுளுக்குப் பணிபுரிதல் ஆகிய இவை காய சுத்தி என்றும் கூறப்படும்.

ஆகவே இந்த மூன்று என்னும் எண்ணனது தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் தத்துவங்களின் பேருண்மைகளையும் பெருமைகளையும் எவராலும் அளவிடற்கரிது என்பது உணரத்தக்கது.

ஓம்-தத்-சத்.

## ஸ்ரீமத் அபேதானந்த சுவாமிகளின் பொன்மொழி.

(விருத்தம்)

‘‘தலைமிசைக் கைகள் கூப்பி
சத்தமிட்டுரக்கக் கூவி
உலையுறு மெழுக தென்ன
உருகி நீ பஜனை செய்தால்
தலைவனும் இறைவன் பாதம்
சிரமிசைச் சூட்டு வானே
நிலையென அதனைப் பற்றி
நன்னிலை சேர்க’’ என்றான்.

நானெனும் அகந்தை யோடு
நாமத்தைச் சொல்வ தாலே
தேனினும் இனிய இன்பத்
திருவருள் சுவைக்க வொண்ணா
சீனியின் குன்றின் மேலே
சிற்றெறும் பொன்று வாயில்
தீனியாம் அரிசி கவ்விச்
சென்றிடில் பயனுண்டோ தான்?

உ

# அவதூதர் ஸ்ரீமத் கோம்பை சுவாமிகள்.

(மதுரானந்தா)

மதுரை ஜில்லாவில் பெரியகுளம் தாலுகாவில் கோம்பை என்ற கிராமம் ஒன்றிருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் வட சாரலிலே திகழ்கின்ற இவ்வூரில் தமிழ்கலந்த கன்னடத்தைத் தாய்மொழியாகக்கொண்ட கௌடர் ‘என்ற கவுண்டர் இனத்தார் மிகுதியாய் வாழ்கின்றனர். அவர்களுக்கு முக்கிய தொழில் வ்வசாயம். ஆடுமாடுகள் வளர்த்தல் முதலியவையாம். இந்தக்கவுண்டர் குலத்திலே ஒரு கோடீஸ்வரருடைய திருமகவாக அவதாரம் பண்ணியவரே நமது கோம்பை சுவாமிகள். இவரது தாய் தந்தையர் பெயர் தெரியவில்லை. இவரது மரபினராகவும் இப்போது யாருமில்லை. கர்ண பரம்பரையாக இவரைப்பற்றி வழங்குகின்ற சில வரலாறுகளை கீழே தருகிறோம். இவர் சுமார் 200 அல்லது அதற்கும் கூடுதலான ஆண்டுகட்குமுன் பிறந்திருக்கவேண்டும். இவர்கள் சமாதியாகி இன்று 34 வருடங்களாகின்றன. அதற்குமுன் 40 வருட காலம் நாகர் கோவிலிலும் அதற்குமுன் பலகாலம் தஞ்சாவூர் ஜில்லாவில் பல இடங்களிலும் வாழ்ந்திருந்தார்கள். இவர்களுடைய வயதைத் திட்டமாகச் சொல்லமுடியாது. அவரது பெயரும் யாருக்கும் தெரியாது.

‘‘ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்(கு) ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ’’

என்றபடி, ‘கோம்பை’ என்றவூரில் பிறந்தவராதலால் ‘கோம்பை சுவாமிகள்’ என்று உலகம் அழைத்தது. சிவஞானியைப் பெற்றதால் அவ்வூருக்கும் அழியாப் புகழும் புண்ணியமும் வந்தெய்தி யிருக்கி

**றது. சிவஞான வாரிதியிலே, நாமரூபமயமான சீவபோதச் சிற்றோடை சென்று இரண்டறக் கலந்தபின் எஞ்சி நிற்பது அவ்வகண்ட ஸச்சிதானந்தக் கடல். அவதூதர்களுடைய உண்மை நிலை அதுவாகும். அத்தகையோரை உலகம் ஏதாவது ஒரு பெயர் சூட்டி அழைக்கிறது.**

நமது சுவாமிகளை கருவிலே திருவுடைய யோகப் பிரதிஷ்டர் அல்லது சாமுசித்தர்எனலாம். ''ஸுசீனும் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோபி ஜாயதே'' என்ற கீதா வாக்கியத்தின்படி, சிவபக்தியும் செல்வமும் சிறந்த மரபிற்செனித்த சுவாமிகள் சுமார் 15 வயதிலேயே வீட்டைத்துறந்து வெளியேகினார். 'பொய்யை விட்டுப் புறப்பட்டேன்'' என்றபடி இவர்கள் துறவறம் பூணுவதற்கான காரணம் ஒன்றுநேர்ந்ததாகக் கூறுவர். இவர்களுடையமாட்டுமந்தையிலே ஒரு பசு கன்று போட்டது. ஆனால் பால் கறக்கவிடாது. அந்தப்பசு வழக்கமாக மலையில் மேயப் போகும்போது ஒரு குகைக்குள் போகுமாம். இதை ஒருநாள் சிறுபையனாயிருந்த நமது சுவாமிகள் கண்டு பசுவைப்பின்தொடர்ந்துகுகைக்குள் சென்றாராம் குகைக்குள் சென்ற பசு நேராக அங்கிருந்த ஒரு முனிவரண்டைச் சென்று நின்றதாம். முனிவர் பசுவின் அகட்டிலிருந்து பால் பருகியபின் பசுவைத் தொடர்ந்துவந்த பாலனைப் பார்த்தாராம். அந்தஅருட்பார்வை சக்ஷுதீக்ஷையாயிருந்தது. ஸற்குருநாதர் திருவருள் பதியப்பெற்ற சீடன் உலகையும் உற்றார் உறவினரையும் மறந்தான். தாயினிடம் சென்று ''அம்மா என்னை நீ தேடக்கூடாது'' என்று கூறி ஒரு சில நாட்களுக்குள் முற்றத் துறந்து வெளியேகினார். அதற்குப்பின் சில வருடங்கள் எங்கே எவ்வாறு கழிந்தன. என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் சுவாமிகள் நாகர்கோவிலுக்கு வந்து சுமார் 40 வருடங்களாக அங்கு வாழ்ந்து கடைசியாக 10மாதங்கள் ஈத்தாமொழியிலும் வாழ்ந்து சமாதியெய்திய வரலாற்றைச் சுருக்கமாகக் கீழே தருகிறோம்.

சிறுவயதிலேயே துறவறம் பூண்ட சுவாமிகள் தஞ்சாவூர் முதலிய இடங்களில் பல வருடம் சுற்றி அலைந்து இற்றைக்கு சுமார் 75 ஆண்டுகளுக்குமுன் நாகர்கோவில் நகரின் வடபகுதியாகிய வடசேரியில் வந்து சேர்ந்தார். ஆனால் வடசேரி வந்துசேருவதற்குமுன் நாகர் கோவிலுக்கு 4 மைல் தொலைவிலுள்ள தாழக்குடியில் வந்ததாகவும், அங்கு ஒரு சிற்றுண்டிச் சாலையில் சென்று முதலாளியைப் பொருட்படுத்தாமல் தோசை ஒன்று எடுக்க அவர் ஏதோபயித்தியம் என நினைந்து அடிக்க அந்த உதையும் வாங்கிக்கொண்டு அவ்வூரை விட்டு நேரே வடசேரி வந்ததாகவும் கூறுவர். சுவாமிகள்



வடசேரி சன்னிதியிலுள்ள சந்தையிலும் சந்தைக்கு இரண்டு பர்லாங் சுற்றளவிலுமாக தங்கியிருந்ததைத் தவிர இந்த 40 வருடங்கள் வேறிடங்களுக்குப் போனதாகத் தெரியவில்லை.

**பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந்திட்ட பிச்சையெல்லாம்**
**நாய்போல்அருந்தி நரிபோல்உளன்றுநன் மங்கையரைத்**
**தாய்போற்கருதித் தமர்போல் அனைவர்க்குந் தாழ்மை சொல்லிச்**
**சேய்போல் இருப்பர்கண் டீர்உண்மை ஞானந்தெளிந்தவரே.**

என்ற பட்டினத்தடிகளின் திருப்பாடற்கு விளக்கமாக அமைந்தது எனலாம் நமது சுவாமிகளின் வடசேரி வாசம். 'சேய்போல இருப்பர்'' என்றபடி அரையிலே கந்தைக்கோவணம் ஒன்று, கவனிப்பாரின்றித் தொங்க சுவாமிகள் திகம்பரனாகவே காணப்பட்டார். ''சித்தத்திலே சிவம் நாடுவர் —அதில் சேர்ந்து களித்துல காளுவர் —நல்ல, மத்தமத வெங்களிறுபோல் நடைவாய்ந்து இறுமாந்து திரிகுவர்'' என்ற பாரதி வாக்கின்படி ஆடையின்றி, சிவஞானிக்குரிய கம்பீரத்துடன் அலைந்த நம் பெருமானை மூவாசைப் பைத்தியம் பிடித்த உலகம் 'பித்தன்' என்றே கண்டது. ஆனால் நாள் செல்லச் செல்ல சுவாமிகளது சீரிய நிலையை உலகம் அறிந்தது. தூற்றியவர் போற்றினர். பழித்தவர் புகழ்ந்தனர், பூசித்தனர். ஆனால் பெருமான் எப்போதும் துவந்துவாதீத நிலையிலேயே நின்றார்.

ஒருவரைப் பார்த்தமாத்திரையிலே, அவர் நல்லவரா; பொல்லாதவரா, அன்பரா ஆங்காரியா, என்ற அறியக்கூடிய ஞானக்கண் நம்அப்பனிடத்திலிருந்தபடியால், நல்லவர் தருகின்ற உணவையே உட்கொண்டு வந்தார். 'சிலர்' இருக்குமிடம் தேடி உருக்கமுடன் உணவு கொண்டுவந்தாலும் உண்ணார். சிலருடைய வீட்டிற்குள் தானே சென்று அடுக்களைக்குள் நுழைந்து பானையிலிருந்து தானே உணவை எடுத்து உண்பார். சிலவேளை பெண்களிடம் ''அக்கா சோறு போடு'' என்று கூடக்கேட்பார். சிலர் சுவாமிகளுக்குச் சாதம் ஊட்டுவதும் உண்டு. சாதம் கொஞ்சந்தான் சாப்பிடுவார். பெரும்பயற்றில் பிரியம் அதிகம். பனையிலுள்ள பதனீர், பனை வெல்லம் பேயன் வாழைப்பழம் இவை பிரியமாக உண்பார். மூக்குத்தூள் அடிக்கடி உபயோகிப்பார். வெற்றிலை, பாக்கு, புகையிலை, சாப்பிடுவார். ஆனால் சுண்ணாம்பு சேர்ப்பதில்லை. வேண்டிய பொருளெல்லாம் கொடுப்பதற்கு ஆட்கள் எப்போதும் காத்திருப்பர் என்றாலும் சிலவேளை சாப்பாட்டு விடுதியிலுள்ள எச்சிலை நாய்களுடன் சேர்ந்து நிம்மதியாக அருந்துவார். சாக்கடை நீரையும் சாப்பிடுவார். நன்மனம் படைத்த அன்பர்களது கடைகளிற்சென்று தோசை, பழம் வெற்றிலை முதலியவை தானாகவே எடுத்துச் சாப்பிடுவார். கடைச்சொந்தக் கார

ர்கள் அது கண்டு மிகவும் சந்தோஷப்படுவார். ஏனெனில் அன்றைக்கு அவர் கடையில் விற்பனை பெருவாரியாயிருக்கும். சுவாமிகள் மண்ணைத்தொட்டாலும், பொன்னாகும் என்பது எல்லோருடையவும் அனுபவம். ஒருவர் கையிலிருந்து ஏதாவது சுவாமிகள் வாங்குவாராயின் அவருக்கு நன்மையுண்டாகும் என்பது திண்ணம் 'நடமாடுங் கோயில் நம்பர்' ஆகவிளங்கும் ஞானிகளுக்கு ஒன்று ஈந்தால் படமாடுங்கோயில் பகவற் கங்காகும்' ஆதலாலே மக்கள் சுவாமிகளுடைய வருகையையும் தரிசனத்தையும் எதிர் பார்த்து நிற்பர்.

நம் சுவாமிகள் வடசேரியில் நெசவுத் தொழிலையுடைய சாலியர் தெருவிலுள்ள சில அன்பர்களுடைய வீடுகளுக்கு நாடோறும் வழக்கமாகச்சென்று உணவு கொள்வார். அப்படி சுவாமிகளுக்கு உணவு ஊட்டியவர்களில் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர் திருவாளர் பிச்சாண்டித் தரகனார் ஆவர். இவ்வன்பர் மிகவும் சிரத்தையுடன் சுவாமிகளுக்குத் தொண்டுசெய்துவந்த ஓர் செல்வந்தர் இவர்கள் கல்வி கேள்வியிலும் மிகச்சிறந்தவர். இறுதியில் திருச்செந்தூர் திருவிழா பார்க்கச் சென்று முருகப்பெருமான் திருவடியிலேயே காலமானார்.

அடுத்தபடியாக சுவாமிகளுக்குச் சிறந்த தொண்டு செய்த அன்பர், நாகர்கோவில் திரு சுப்பையன் ஆச்சாரி அவர்களாகும் இவர்களுக்குத் தொழில் பித்தளை, வெள்ளோட்டுப் பாத்திரங்கள் வார்க்கிறது இவர்கள் அடிக்கடி நம் சாமிகளுக்குப் பிரிய உணவு வகைகளைத் தயார்செய்து வடசேரிக்குக் கொண்டு செல்வார். இவர் அளிக்கும் உணவைச் சுவாமிகள் பிரியமாக உண்பார் இவரும் சுவாமிகளோடு நீண்டநேரம் உட்கார்ந்து, கை கால்களைத் தடவித் தொண்டு செய்வார். இருவருக்குமிடையிலுள்ள அன்பு அளவற்றது. திருநாவுக்கரசர்மீது பெரும்பத்திபூண்ட அப்பூதி நாயனார், தன் குழந்தைகளுக்கும், வீடுவாசல்களுக்கும் திருநாவுக்கரசு, திருநாவுக்கரசு என்று பெயர்சூட்டி அடிமை பூண்டிருந்ததைப்போல நமது ஆசாரி அவர்களும் தமக்குப் பிறந்த குழந்தைகளுக்கும் ''கோம்பை'' என்ற திருநாமத்தை சூட்டினார். இவர் சுவாமிகளுக்குத் தொண்டுசெய்து வந்தகாலத்திலே இவருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது, இது ஓர் அசாதாரணக் குழந்தையாகவே இருந்தது. தன் அறிவு வந்து நடக்கத் தொடங்கியதும் கோயில்களுக்குப் பிரியமாகப் போகும், பஜனை, ஜபம் தியானம் இவைகளில் கூடுதல் ஈடுபடும், உலகத்தவர் உறவை விட்டு தன்னலந் தனியாயிருக்கும். சிறுவயது முதலே இதற்கு ஜடையிருந்தது. சில வேளை வரப்போகின்ற காரியங்களைத் திடீரென்று சொல்லிவிடும். குழந்தைகளுக்குரிய சஞ்சலம் இல்லை. நிம்மதி. இத்தெய்வீகக் குழந்தைக்கு சுமார் ஆறு வயது ஆனதும் வயிற்றுக்கழிச்



சல் நோய் கண்டது. சிலநாள் படுக்கையிலிருந்தது. இறுதி நாளுக்கு முந்திய தினம் தான் அடுத்தநாள் புறப்பட்டு விடுவதாகக்கூறி அவ்விதமே மறுநாள் சிவலோகம் சேர்ந்தது.

இந்த சுப்பையன் ஆசாரியாருடைய மக்கள் இப்போதும் கூட அடிக்கடி நமது சுவாமிகளுடைய சமாதிக்கு வந்து தாங்களே பூஜை செய்து வழிபட்டுச்செல்வது வழக்கம். சுவாமிகளது குருபூஜை தினத்தன்றும் இவர்கள் வந்து பூசை அன்னதானம் இவைகள் செய்கிறார்கள்.

இரவுவேளை சுவாமிகளை அனேகமாக ஒருவருக்கும் காணமுடியாது. சிவஸ்வரூபமான சுவாமிகள் இரவுவேளையை சுடுகாட்டிலேயே கழிப்பார். சுடுகாட்டில் நிலவுவது ஒரே அமைதி, சாந்தம் அச்சமில்லை, துயரமில்லை, ஆசையில்லை, சினமுமில்லை.

'அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
அறிவுதனை அருளினா லறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயிற்
பிறியாத சிவன்றானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெல்லாந் தானாய்த் தோன்றி
நெறியாலே இவையெல்லாம் அல்ல,வாகி
நின்றென்றுந் தோன்றிடுவன் நிராதாரனாயே.

என்ற சிவஞான சித்தியார் திருப்பாடலின்படி சுவாமிகள் ஒழுகினசேரி ஆற்றங் கரையிலுள்ள சுடுகாட்டிலே ஞான நிட்டை கூடிக் கழித்திருப்பார். 'எல்லா வுயிர்களுக்கும் இரவு, யோகியருக்குப் பகல்' என்ற கீதாவாக்கியத்திற்கு இலக்கியமாய் அமைந்திருந்தது சுவாமிகளின் வாழ்வு. சுவாமிகளுக்குப் பிரியமான ஒரு அன்பர் இரவில் சிலவேளை சுவாமிகளிருக்கும் சுடுகாட்டிற்குப் போவாராம் அப்போது அவருக்கு எப்போதுமே வெளியுலகில் மௌனியாயிருக்கும்சுவாமிகள் திருவாய் மலர்ந்து ஞானவாசிட்டத்திலுள்ள அரியகருத்துக்களை உபதேசிப்பதுண்டு. என்று மேற்படி அன்பருடைய நண்பர் வடசேரி திரு பி. சிதம்பரதாணுபிள்ளைஅவர்கள் அடியேனிடத்தில் கூறியிருக்கிறார்.

இரவுவேளையில் சிலபோது பாதையருகிலும் சுவாமிகள் படுத்திருப்பதுண்டு. அப்போது தனது உடல் உறுப்புகளெல்லாம் துண்டு துண்டாய் வெவ்வேறாகக் கிடப்பர். இந்த அதிசயம் பலதடவையிலும் பார்த்த சில அன்பர்கள் அடியேனிடத்தில் கூறியிருக்கின்றனர். ஹடயோக சித்திவல்ல யோகிகள் இங்ஙனம் செய்வது வழக்கம்.

குழந்தை பெருத அனேகம் தாய்மார்கள் சுவாமிகளுக்கு உணவு ஊட்டியும், அவரிடம் பிரார்த்தனை பண்ணியும், குழந்தை பேறு அடைந்திருக்கின்றனர். பலர் நோய் நீங்கினர். பலர் செல்வந்தராயினர். சில குருடர்கள் கண் பெற்றனர். சுவாமிகளைத்துன்புறுத்தி ஒருவர் தன் கண்ணை இளந்ததுமுண்டு. இம்மாதிரி சாபானுக்கிரக சத்தியானது இன்னும் அவரது சமாதியிலே நிகழ்வ்துண்டு.

ஸ்ரீ ராமக் கிருஷ்ணருடைய வாழ்க்கைத் துணைவியாகிய ஸாரதா தேவியாருடைய ஸ்ரீ ஸாரதா அன்னையின் சீடராய் விளங்கியவரும் அடியேனை ஆட்கொண்டகுருநாதருமாகிய ஸ்ரீமத் அம்பானந்த சுவாமிகள் தன் சிறுவயதில், ஒருநாள் நம் சுவாமிகளைத் தரிசிக்க, பழம், வெற்றிலை, பாக்கு முதலியவை வாங்கிச் சென்ற செய்தியை அடியேனிடம் குறிப்பிட்டிருக் கின்றனர். குருநாதர் சுவாமிகளை நெருங்கியதும் சுவாமிகள் எழுந்து ஓடி கொஞ்சத் தொலையில் சென்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்தனர். குருநாதர் அவ்விடம் சென்றபோதுஅவரிடமிருந்த வஸ்துக்களை வாங்கிச் சந்தோஷமாகச் சாப்பிட்டு குருநாதருடைய தாடி மயிரைத்தடவி அருள்புரிந்தனர்.

சுவாமிக்ளுடைய வடசேரி வாழ்க்கையிலே முக்கியமான மற்றொரு சம்பவம் நடந்தது. அக்காலத்தில் திருவிதாங்கூர் ராஜ்யத்தை ஆண்டிருந்த மூலத்திருநாள், ராமவர்ம மஹாராஜா தனது தலைநகராகிய திருவனந்த புரத்திலிருந்து வடசேரிக்கு எழுந்தருளி வந்துகொண்டிருந்தார். பகல் முழுதும் பாதையோரத்திலே கழிக்கும், திகம்பரனாகிய நமது சுவாமிகளை’ போலீஸ் காவலாளர்கள் பாதையிலிருந்து பலவந்தமாக அப்புறப்படுத்தி சந்தைமதில் சுற்றுக்குள் [காம்பவுண்ட்] தள்ளி, வாசல்களைத் தாளிட்டு வெளியே நின்றனர். ஆனால் மகராஜாவின் குதிரைவாகனம், சந்தை வாசலுக்கு முன் வந்ததும் சுவாமிகள்அரசன்முன் தோன்றிவிட்டார்—போலீஸ் படை ஏமாந்தது. அரசன் சுவாமிகளுடைய பெருமையை அறிந்து கீழிறங்கி மரியாதை செய்து வணங்கினார். ஒரு புதிய வேஷ்டியொன்று வாங்கித் தந்தார், ‘கரித்துணிக் கந்தலைக்கட்டிய சுவாமிகள் மன்னன் தந்த வேட்டியை எட்ட எறிந்தார். மன்னன் தன்னுடன் சுவாமிகளைக் கொண்டுபோக நன்ருக முயன்றபோதும் சுவாமிகள் சம்மதிக்காமல் தன்போக்கில் நடந்துசென்றுவிட்டார், வெகுநாள் கழித்து, சுவர்மிகள் வடசேரியை விட்டு ஈத்தாமொழிக்கு வந்து தங்கியிருக்கும்போது கொல்லமாண்டு 1099—ஆம் ஆனியிலோ ஆடியிலோ, மூலத்திருநாள் மன்னர் திருவன்ந்தபுரத்தில் காலமான அந்த நிமிஷத்தில், சுவாமிகள் திருவாய் மலர்ந்து ‘மன்னன் இறந்துபோனான்’ என்று கூறினர்.



நீண்டகாலமாக நாகர்கோவிலில் தங்கி பற்பல திருவிளையாடல்கள் புரிந்து அன்பர்களை அனுக்கிரகித்துவந்த அடிகள் திடீரென ஒருநாள் தென் திசையிலுள்ள கடலோரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். இதுகண்ட அன்பர்கள் பலர் சுவாமிகளை நாகர்கோவிலிலேயே தங்கியிருக்கும்படி நன்ருகக்கெஞ்சி வேண்டினர். பற்றற்ற பரமஞானியாகிய சுவாமிகள் ஒருவரையும் கவனிக்காமல் நேராக நாகர்கோவிலுக்கும் மேற்கே பதினைந்காவது கல்லிலிருக்கும் குளச்சல்வரையும் நடந்துபோய்அங்கிருந்து கிழக்கே திரும்பி தருமபுரம் என்று பேர்போன ஈத்தாமொழி கடலோரத்தில் புன்னைகள் நிறைந்த மணல்வெளியில் வந்து தங்கினர். முன்னமேயே உலகப்புகழ் பெற்றிருந்த சுவாமிகள் இந்த இடத்தில் வந்ததுகண்ட மக்கள் சுவாமிகள் சமாதி கூடுவதற்காகத்தான் இங்கு வந்துள்ளார் என்று முடிவு கட்டினர். இதைப்பற்றிச் சுவாமிகளிடத்தில் நேரடியாக ஒரு அன்பர் கேட்டபோது சுவாமிகளும் அங்ஙனமே ஒத்துக்கொண்டனர்.

’இராமன் இருக்குமிடம் அயோத்தி’ என்றபடி சுவாமிகள் இந்தக் கடலோரத்திற்கு வந்ததும் நூற்றுக்கணக்கான மக்கள் தரிசனத்திற்காக வந்துபோகத்தொடங்கினர். சுவாமிகள் சன்னிதியில் எப்போதும் ஒரு கூட்டம் காணலாம், சுவாமிகளுக்குத்தேவையான தின்பண்டங்களாகிய பழம், பெரும்பயறு, தோசை. வெற்றிலை பாக்கு, முதலியவை விற்பனைசெய்யும் சிறு கடைகளும் ஆங்கு தோன்றின. கடற்கரையிலுள்ளஒன்றிரண்டு செம்படவர் குடிசையிலும் சுவாமிகள் தட்டுத் தடங்கலில்லாமல் புகுந்து பெரிய பச்சைமீன்கள், சாதம் இவற்றைக் கையாலெடுத்துத் தின்றுவிடுவார்கள். பரவர் குடியைச்சேர்ந்த திரு கபரியேல் வாத்தியார் என்ற ஒரு அன்பர் சுவாமிகளுக்குச் சிறந்த தொண்டு செய்தார். இந்த வேளையில் தென்காசியிலிருந்து நோய்வாய்ப்பட்ட ஒரு சுவாமிகளும் இங்கு வந்து நமது கோம்பை அப்பனுக்கு மிகுந்த தொண்டு செய்தார்கள். மெல்ல மெல்ல அவரது நோயும் நீங்கியது. ஈத்தாமொழியிலிருந்து இரண்டு மைல் தொலையிலுள்ள இராஜாக்கமங்கலத்திலிருந்தும் பல அன்பர்கள் தினந்தோறும் வந்து சுவாமிகளைத் தரிசித்துச் செல்வர். அவர்களில் முக்கியமானவர்கள் ஆசிரியர் ஸ்ரீ ஏ. நாராயணபிள்ளை ஸ்ரீ உலகுடைய பெருமாள் நாடார், ஆசிரியர் ஸ்ரீ எம். ஆண்டி நாடார் முதலியவர்கள். ஸ்ரீ ஆண்டிநாடார் அவர்கள் வழக்கமாக சுவாமிகள் திருமுன் ஸ்ரீ தாயுமானவர் பாடல் தேவாரம் திருவாசகம் பாடுவார்கள். இந்தத் தமிழ்மறைகளைக் கேட்க சுவாமிகளுக்குப் பிரியம் அதிகம். ஆண்டி நாடாரை கண்டதும் சுவாமிகளே கைச்சாடைக் காட்டி பாடும்படி பணிப்பார்களாம். சங்கீதத்தில் விருப்பம் அதிகம்.

சுவாமிகள் தங்கியிருந்த இடம்மணற்பரப்பு. அங்குக்கூறுகின்ற ஜனங்கள் தண்ணீர் கிடைக்காமல் மிக அவதிப்படுவதைக் கண்ட தென்காசி சுவாமிகள் நமது அடிகளிடத்திலே சென்றுநிலைமையைச் சொன்னார். அடிகள் திருவுள்ளம் இரங்கி தாம் தங்கியிருந்த இடத்திற்கு நேர் முன்பக்கம் சென்று ஒரு சிறு சுள்ளியால் ஒரு இடத்தை சுட்டிக்காட்ட அங்கே தரையைத் தோண்டினார்கள் எட்டு அடி தோண்டுவதற்குள் சுத்த ஜல ஊற்று கண்டது இன்றைக்கும் அது தீர்த்தமாகக் கருதப்பட்டு வருகிறது. கோயில் பூசை முதலியவைகளுக்கு பயன்பட்டு வருகிறது. கடலோரத்திலுள்ளபல கிணறுகளும் உப்புத்தண்ணீராயிருக்க, சுத்த ஜலக் கிணறுதந்த கோம்பை நாதன் அருள் வாழியவே!

சுவாமிகளுக்கு வெய்யிலில் இளைப்பாறுவதற்காக தென்னோலை வேய்ந்த ஒரு சிறு குடிசைகட்டப்பட்டது, புன்னைமரத்தின் கீழமைந்த அந்தக் குடிசையே சுவாமிகளது கடைசிவாசஸ்தானமாயிற்று. இங்ஙனம் பத்துமாதங்கள்கழியவே மாசிமாதம் 7-உ புதன்கிழமை இரவு 8மணி சுமாருக்கு பக்கத்தில்யாருமில்லாதபோது சுவாமிகள் தனது இகலோக லீலையை முடித்து நிர்விகற்ப சமாதிகூடி விதேக கைவல்யம் பெற்றார்கள். அன்றுகிருஷ்ணபக்ஷத்து தசமி $34\frac{1}{2}$ நாழிகைக்குமேல் ஏகாதசி ஆரம்பம்; மூல நட்சத்திரம் சுவாமிகளின் தொண்டராகிய தென்காசி சுவாமிகள் இதுகண்டு மிகவருந்தி அன் அன்பர்களுக்கெல்லாம் தெரிவித்தார். உலகமெல்லாம் திரண்டுவந்தது. மறு நாள் பகல் சுமார் 4-மணிக்கு வேதவிதிப்படி சுவாமிகளது திருவுடலை அபிஷேகம் அலங்காரம் செய்து 10-அடி ஆழத்தில் கல்லறை ஒன்றுகட்டி. கற்பூரம் திருநீறு பொன் வெள்ளிக்காசுகளிட்டு சமாதி செய்தார்கள், சமாதிக்குமேலே சிவலிங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. அன்றுமுதல் இருவேளை பூசை வந்தனை வழிபாடுஆகியவை நடந்தேறி வருகின்றன, **சுவாமிகளது** சமாதியைச்சுற்றியுள்ள 66 ஸென்ட் பூமியை மட்டத்திற்கு மான்யமாக விட்டிருக்கிறார்கள். சமாதியில் முக்கியமாக பௌர்ணமி தோறும் இரவில் 7மணியிலிருந்து 1மணிவரையிலும் திருவாளர் எஸ். தங்கவேல்நாடார் B-A அவர்களின் தலைமையில் ஒரு அந்தர்யோகம் நடைபெற்று வருகிறது. அவ்வேளை விசேட பூசை, பஜனை, தியானம், சமயச்சொற்பொழிவுயோகாசனப் பயிற்சி முதலியவைநடைபெறும். ஸ்ரீகோம்பைநாதருடைய திருவருளால் அவரது சமாதிமடத்தன்பர்கூட்டம் பெருகிவருகிறது. அடியார் தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தாகவிளங்கும் நம் அடிகள் வாழ்க! அன்பர் வாழ்க.

பித்தனாய்த் திரிந்த சுத்தப், பிரமமே போற்றி கோம்பை
அத்தனே போற்றி! ஈத்தா, மொழிவளர் அரசே போற்றி!
சித்தனே போற்றி! தெய்வத், திகம்பரா போற்றி உந்தன்
கைத்தலம் அளித்த மண்ணும் கனகமாய்த் தீரும் போற்றி!

———

# யோக ஆசனங்கள்.


(*S. P. A.* **சிவலிங்கம் - சேலம்**)

## — 67; பார்ஸ்வ கோணாசனம் —

[பழகும் விதம்]

காற்றோட்டமானதும், சுத்தமானதும், சமதளமானதுமான விரிப்பின்மேல் கால்கள் இரண்டையும் சற்று அகட்டி வைத்துக் கொண்டு நேராய் நின்று கொள்ளவும்.

பின் இடது பாதத்தின் முழங்காலை மடித்து பாதத்தைச் சிறிது திருப்பி வைத்துக்கொள்ளவும். முதுகுடன் சிறிது இடது பக்கமாய்க் குனிந்து [முன்பக்கம் குனியாது] இடது கையை மடித்து இடது பாதத்தின் விரல் மேல் உள்ளங்கை படும் வண்ணம் இடது கையை வைத்திருக்கவும் வலது கையை வலது காதை யொட்டியவாறு நேராய்த் தலைப்பக்கமாய் நீட்டி வலது காதைத் தொடும் வண்ணம் நேராய்த் தலைப் பக்கமாய் நீட்டியிருக்கவும். உள்ளங் கை மேல் பார்த்திருக்க வேண்டும்.




முகம் முன்பக்கம் பார்வை இருத்தல் வேண்டும். சுவாசம் சமநிலையில் இருக்கவும். வலதுகால் வளையாமல்

நேராய்ச் சாய்வுடன் இருக்கவும். சித்திரம். 67. பார்க்கவும் பின் கால்களை மாற்றி வலது காலிலும் இவ்வாறு செய்யவும்.

## ஆசனத்தைக் கலைப்பித் தல்.

இடது காலின் மேல் வைத்திருக்கும் இடது கையை எடுத்து சுவாசத்தை உள்ளிழுத்தவாறே நேராய் நிமிர்ந்து கால்கள் இரண்டையும் ஒன்று சேர்த்து சிரமபரிகாரம் செய்து கொள்ளவும்.

சாதாரணமாய் ஐந்தாறு தடவைகள் அவரவர்கள் சவுகரியத்தைப் போல் செய்யலாம். ஆண், பெண், அனைவரும் செய்யலாம்: பெண்மணிகள் கர்பகாலம். மாதவிடாய் ருதுசமயங்கள் தவிர்த்து மற்ற நாட்களில் செய்யலாம்.

**பலன்கள்:-** விலா எழும்புகள். கால்களின் மூட்டு, தொடை, இடுப்பு, இவைகளுக்கு வலுவைக் கொடுத்து இரத்தோட்டத்தை அதிகரிக்கச் செய்யும். இருதயம் வலுவடையும். மலஜலம் நன்கு சுத்தியாகும்.

## 68, சதுர்முக கோணாசனம்

### [ செய்யும் விதம் ]


சுத்தமான சமதள கெட்டி விரிப்பின் மேல் நேராய் நின்று கொள்ளவும்.

பின் கால்கள் இரண்டையும் சற்று அகட்டி வைத்து, கைகள் இரண்டையும் தோள் பட்டைப் பக்கமாக நீட்டவும் இபபோது கைகளும் தோல் பட்டைப் பக்கமாக நீட்டியிருக்கவும்

இனி முன் குனிந்து பார்வை கீழே பார்க்கவும் கைகள் நீட்டியவாறு இருக்கவும். இது முதல் நிலை



இவ்வாறே இடுப்புடன் நேராய் நிமிர்ந்து பின் பக்கமாய் அதாவது முதுகுப் பக்கமாய் வளைக்கவும். கால்கள் அகட்டிய நிலையிலும், கைகள் இரண்டும் நீட்டிய நிலையிலும் இருக்கவும். முதுகு நன்கு பின் பக்கம் வளைந்திருக்கவும். சுவாசம் சமநிலையிலிருக்கவும். இவ்வாறு தேவைக்கு தக்கவாறு செய்யவும். **இது இரண்டாம் நிலை:**



68

பின்பக்கமாக வளைந்த நிலையை நேராய் நிமிர்ந்து வலது காலை இடுப்புடன் திருப்பிமுன் கொண்டுவந்து பாதங்களின் விரல்கள் முன்னால் இருககும்படி செய்யவும். கைகள்இரண்டும் தோள் பட்டையுடன் பக்கவாட்டில் நீட்டியிருக்கவும். விறைப்பாய் வளையாது இருக்கவும். பார்வை கீழே பார்க்கவும். **இதுமூன்றும் நிலை.** சித்திரம் 68 பார்க்கவும். சுவாசம் சம நிலையிலிருக்கவும். இவ்வாறு மூன்று நிலைகளிலும் தேவைக்குத்தக்கவாறு இருந்தபின் ஆசனத்தைக் கலைக்கவும்

## கலைக்கும் விதம்

முன் குனிந்திருக்கும் நிலையில் சுவாசம் உள்ளிழுத்துக் கொண்டே நேராய் நிமிரவும். பின் வலதுகாலை இடது

காலுடன் ஒன்றுசேர்த்து நேராய் வைத்து கைகளிரண்டையும் தாளப்போட்டு சிரமம் தீர்த்துக்கொள்ளவும்.

***பலன்கள்:-*** ஆரம்பநிலையில் முன் குனிந்திருப்பதால் இடுப்பு, கைகள் இவைகளுக்கு வலுவையும். வயிறு நல்ல பசியையும் உண்டாக்கும்.

இரண்டாம் நிலையில் பின்பக்கம் வளைந்திருப்பதால்முதுகின் எலும்பு வீரியப்படும். விந்து கெட்டிப்படும். நரம்புகள் வீரியப்படும். புஜங்கள் அதிக வலிமையும், சதைகள் கெட்டியும் ஏற்படும். வயிற்றின் நரம்புகள் இழுத்துப் பிடிப்பதால் அஜீரணத்தைப போக்கி ஜீரணசக்தியை அதிகரிக்சச் செய்யும்.

மூன்றும் நிலையில் வலதுகால் திருபபி முன் கொணடு வந்திருக்கின்றது: ஆகவே கால்களுக்கும், தொனட, இடுப்பு கைகள் முதலியவற்றிற்கும் நல்லஇரத்தோட்டத்தையும் மார்புக்குச்சமமான நாடித்துடிப்பையும் ஏற்படுத்தும்.

காக்காய் வலிப்பு, பித்தசம்பந்த அரோசிகங்களை நீக்கும். மூளை தெளிவுறும். அறிவு சுத்தப்படும். மூன்றும் நிலையில் கால்களை மாற்றிப்பயிலவும். ஆண், பெண் அனைவருமு செய்யலாம்.

— — ✠ — —

## ராம நாமம்

***ராமநாமத்தை இதயத்தில் வீற்றிருக்கச் செய்வதற்கு எல்லையற்ற பொறுமைதேவையாகும். அனேக யுகங்கள் சென்றாலும் செல்லும் ஆயினும் அதற்காகச் செய்யும் முயற்சி வேண்டப்படுவதேயாகும். ஆனால் எவ்வளவு முயன்றாலும் ஆண்டவன் அருளாலேயேதான் வெற்றிபெறமுடியும்.***

ஓம்

# நாம் காணும் சைதன்யர்

***(ஸ்ரீமதி சிவானந்த விஜயலஷ்மி)***

***பதினாறும் நூற்றாண்டில் பாரத பூமி ஒரு புரட்சியைக் கண்டது. யோகம், யாகம், தவம். ஞானம், ஸ்நானம், தானம், போன்ற பற்பல நற்செயல்களாற்றி. முறைப்படி கர்மானுஷ்டானங்கள் செய்து வேத தர்மத்தைப் பயின்று வாழ்வதே பரமார்த்திக வாழ்வு. ஏனைய எம்முறையாலும், சுலபமாக எவரும் இறையனுபவம் பெற முடியாது என அன்றைய மக்கள் கருதினர். இந்நிலையை மாற்ற ஆண் பெண்; பாலர் விருத்தர், ஏழை, பணக்காரன், என்ற ஏற்றத் தாழ்வுகளை நீக்கி, இடையறாத பக்தியினால், நில்லாத தைல ஒழுக்குப் (தாரை) போல் இறைவன் நாம உச்சாரணத்தால், மரிக்கும் சரீரம் அம்ருதமயமாகிறது, அநித்தியமான உலகு நித்திய சுகம் தரும் பரமன் வடிவு எனத்தோன்றுகிறது. என்ற தத்துவத்தை உணர்த்தி, ஜாதி, சமய பேதமின்றி அனைவருக்கும் ஹரி நாம பஜனையில் பித்து ஏற்படும்படிச் செய்தார் வங்காளத்தில் உதித்த பக்தி, ஞான. வைராக்கிய ஜோதியாம் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மஹாப்ரபு.***

***அணு சகாப்தமும். ராக்கட் யுகமுமாய் இருக்கும் இன்றைய உலகில் எங்கு நோக்கினும் வேதமும் சக்திவிரயமும், சாந்தி நாசமும் ஏற்படும் இந்நாளில். அமைதியும், அழியாத ஆனந்தமும் இறவாத இன்பமும் துயர் கலவாத வாழ்வும், அஞ்சாத நெஞ்சமும் பெற, ஓர் எளிய, இனிய வழிஉளது இறைவன் திருநாமத்தை உணர்ச்சியுடன். உள்ளம் கசிந்து. உரக்கக் கூவி, சிரம் மேல் கரம் குவித்து தான் எனும் அகந்தை ஓடத் தனை மறந்து தாளமிட்டு பாவபிணிபோக பரமனைப் பரிந்து பாடினால் போதும் என்னும் கீதை, உபநிஷத. புராண இதி***

காசங்களின் சாரத்தை ஓதி, உள்ளுண்மையை உணர்த்தி தம் அருகில் வருபவர் உள்ளத்தில் பக்தி கனல் கனன்று ஒளிரவும், பாபம் பறந்து ஓடவும் பண்பு பரிணமிக்கவும், செய்கிறார். பேதமன்ற புனிதரும்; மாபெரும் கீதா அனுபவ யோகியும், சிறந்த சங்கீர்த்தன ஜோதியுமாகிய இந்நூற்றாண்டின் சைதன்யராம் ஸ்ரீமத் அபேதானந்த மஹராஜ் அவர்கள்.

மலையாளம் பயந்த மாணிக்கமாகிய ஸ்ரீ சுவாமிகள், மலையாளத்திற்கு மாத்திரம் உரிய ஒரு செல்வமல்ல. அன்னாரின் அன்பு மொழிகள், அருள் நாதம் ஆத்மீககர்ஜனை, ஆண்டவன் அர்ச்சனை, அகில பாரதம் எங்கும் பரவத்துவங்கியுள்ளது, அவர்கள் மேற்கொண்டுள்ள அகில பாரத நாமப் பிரசார யாத்திரையின் ஒரு பகுதியாக சென்னைமா நகரம் வரை சுவாமிகள் சென்று திரும்பியுள்ளார்கள் தனி மனிதன் தபோவலிமையின் பெரும் சக்திக்கு ஓர் எடுத்துக்காட்டாக, சமீபத்தில் ஸ்ரீ சுவாமிகள் சென்னையிலும், திரு அனந்த புரத்திலும் நிகழ்த்திய கோடி அர்ச்சனைகள் அமைந்தன, திருவனந்த புரத்தில் ஊன், ஹக்கத்தை மறந்து அன்பர்கள் சத்சங்கம் என்ற பெரும் வெள்ளத்தில் பத்து தினங்கள் அல்லும் பகலும் திளைத்து ஆடி, இறுதியில் அரபிக்கடலில் சுவாமிகளுடன் கடலாடிய காக்ஷி வானோர்கள் கண்டுகளிக்கத் தக்கதாய் அமைந்தது. உலகில் எங்குசென்றாலும், எதைப்பெற்றாலும் பெற முடியா அமைதி இன்பம் சாது சங்கத்தில் சுலபமாய்க் கிடைப்பதை ஒவ்வொருவரும் அனுபவபூர்வமாக உணர்ந்தோம்.

“சிவபெருமான் என்று நான் அழைத்தேத்த தவ பெருமான் என்று தான் வந்து நின்றான்” என்ற திருமூலரின் திருவாக்கின் உண்மையை சுவாமிகள் ‘சம்போ - நாராயணா - ராம்-கிருஷ்ண -ஹரி’ என்று



உரக்க, உணர்ச்சியோடு அழைக்கையில், நாம் சுயமாய் உணர்ந்து மெய்சிலிர்க்கிறோம். அன்று சைதன்ய மஹாப்ரபுவைக் காணாதகுறை இன்று இப்புனிதரைக் காண்பதால் தீர்ந்துவிட்டது என்று நம்நெஞ்சம் உரைப்பதுகூட கேட்கிறது!

நாம்காணும் இச் சைதன்யரின் யாத்திரையால் பாரதநாடு எங்கும் பகவந் நாமத்தின் மகிமையும் பக்தியின் பெருமையும் பரப்பப்பட்டு, அனைவரும் பக்திப் பிரவாகத்தில்திளைத்து, நம்மாழ்வார் நவின்றபடி ‘போயிற்று வல்லுயிர்ச் சாபம், நலியும் நாகமும் நைந்து, நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை’ என்ற திருவாக்கு நடை முறையில் நனவில் நிகழ வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம். ஸ்ரீ சுவாமிகள் இப்பூவுலகில் நெடுநாள் வாழ்ந்து, மக்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று அன்னாரின் ஆசிரமத்தில் கோயில் கொண்டுள்ள பால கிருஷ்ணனைப் பணிந்து வேண்டுகிறோம்!

வாழ்க இறையருள்! ஓங்குக இறைவன் நாமம்!!!
வாழ்கபல்லாண்டு அவன் அடியார் அபேதானந்தர்!

---

## ராமநாமம்

ராமநாமத்தைக்கொண்டு உடல், மனம், ஆன்மா சம்பந்தமான சகலரோகங்களையும் குணபபடுத்தி விடலாம். உடல் நோய்களை டாகடர்கள் உதவியைக் கொணடு குணபடுத்திக கொள்ளலாம். ஆனால் ராமநாமத்தை உபயோகித்தால் டாக்டர்சள் யாரும் தேவையில்லை. அத்துடன் குணமாக்கமுடியாத நோயாயிருந்தால் அதைத் தாங்கக் கூடிய சகதியும் கிடைத்துவிடும்.

ஓம்

# நடராஜா ஓம்.

—※—

நடரா ஜாஓம் நடரா ஜா,-அருள்
ஞான சிதம்பர நடரா ஜா;
சுடர்வடி வாம்ஜய நடரா ஜா,-உயர்
துரிய நடம்பயில் நடரா ஜா! (நட)

கனக சபேச நடரா ஜா,-சிவ
காமி சமேத நடரா ஜா;
முனிவர் அகந்திகழ் நடரா ஜா;-ஜகன்
மோகன மாமுக நடரா ஜா! (நட)

கங்கர தரசிவ நடரா ஜா,-ஜய
கௌரி மனோகர நடரா ஜா;
பொங்கர வம்திகழ் நடரா ஜா-,இளம்
பொன்பிறை மின்சடை நடரா ஜா! (நட)

சாம்ப சதாசிவ நடரா ஜா,-ஜய
சங்கர சுந்தர நடரா ஜா;
தேன்பத மேந்திய நடரா ஜா,-உயர்
தில்லையில் ஆடிய நடரா ஜா! (நட)

சிற்பர தற்பர நடரா ஜா,-உயர்
சின்மய நின்மல நடரா ஜா;
அற்புத விற்பன நடரா ஜா,-சத்சி
தானந்த நர்த்தன நடரா ஜா! (நட)

எங்கும் நிறைந்தருள் நடரா,- ஜா தொழும்
எம்மத மும்திகழ் நடரா ஜா;
தங்கிடும் ஐந்தொழில் நடரா ஜா-ஓம்
சந்தத மும்பயில் நடரா ஜா! (நட)

—"பரமஹம்ஸ தாசன்"

# அபேதமும் ஆனந்தமும்!

[கி. வானமாமலை]

பிறவிகளுள் அரிதான மானிடப் பிறவியைப பெற்றவர்கள் பாககியவான்கள்

பெரியவர் என்றும் சிறியவர் என்றும் மக்களை இருகூறுகப் பிரிக்கலாம்.

அரிய செய்கைகளைச் செய்து புகழோடு தோன்றும் பெரியவர் ஒரு சாரார் செய்தற்கு அரியவற்றைச் செய்யத் தெரியாது. கீழான செய்கைகளிலேயே ஈடுபட்டு நிற்கும் கீழ் மக்களாம் சிறியவர் மற்றொரு சாரார்.

மனம் போன போககில் போகாது, அதை நன்கு அடககி நிறுத்தி சீரிய சாதனையில் முன்வந்து ஒற்றுமையை நாடி நிற்பவர்களே பெரியார். சிந்தையை அடககும் ஆற்றலின்றி மனம் போன போக்கிலே சுற்றித் திரிந்து, புலன்களின் அடிமையாகி அழுக்காறு, அவா, வெகுளி. இன்னாச் சொல் முதலிய தீக்குணங்களைக கொண்டு, நல்வழிச் செல்லாது தீவழிச்செல்பவாகள் சிறியர்.

சிறியர் சிறியராகவே இருந்து விட்டால் உலகத்தில் வேற்றுமைகள் மிகும் என்றெண்ணி அவர்களிடமுள்ள சிறுமையை அகற்றிப் பெருமையைத் தோற்றுவிக்க முயலுவதே பெரியவர் பொறுப்பு எனவே இச்சிறியவர்களையும் புகழோடு தோன்றச் செய்ய ஆவனஞ் செய்வதில் பெரியவர் பெருமுயற்சி எடுத்து வருகின்றனர்.

சிறியவர்களும் பெரியவர்களை அணுகிச் சிறுமையைப போக்கிக் கொள்ள முனைய வேண்டும். ஏன் ? பெரியவர் கேண்மை, நாளும், பிறை போல் வரிசை வரிசையா நந்தும்எனவே தான் நல்லாரைக்காணபதும் நன்று அவா சொல் கேட்பதும் நன்று அவர் குணங்கள் உரைப்பதும் நன்று, என்று அவரோடிணங்கி இருபபதும் நன்று. என்று ஔவைப்பிராட்டியும் அறவுரை தெரிவித்திருககிறார்கள்.

உலகம் சாதி, மதம், மொழி, நிறம், நாடு முதலிய வேற்றுமைகளையுடையது. இவ்வேற்றுமைகளைக் கடந்து பொதுமையின் நிற்பதுதான் நல்லறம். வேற்றுமைகளெல்லாம். ஒற்றுமையெனும் உயர்பண்பின்முன்பாழாகும். வேற்றுமைகளுக்கு இலக்காகி விரோத மனப்பாண்மையின் நின்று வேண்டாத வெறிச் செயல்களில் சிக்குண்டு, விசனத்துடன் காட்சியளிக்கும் சிறியவராகத் தோன்றாமல், ஒற்றுமையின் உறைவிடமாய், அன்பின் உருவமாய், சத்தோஷத்திற்கிருப்பிடமாய் விளங்கும் பெரியவரை விளங்க வேண்டும என்பதையே சமயங்கள் எல்லாம் தெரிவிக்கின்றன.

பேதத்தைப் பார்ப்பது மதியீனம், அபேதத்தைக் காண்பது அறிவுடமை, என்று இயம்புகிறது. வேதாந்தம் சகல ஜீவர்களின் ஒற்றுமையைப் போதிக்கிற உயர் தத்துவமாகிய வேதாத்தம் சூரியன், சந்திரன், அக்கினி, ஆகாயம். நட்சத்திரகள், மலைகள், கடல்கள், நதிகள், அனைத்தும் பரமாத்ம சொரூபம் என்ற அபேத நிலையை வெளிப்படுத்துகிறது. உங்கள் சொந்த ஆத்மன் தான் எல்லாவற்றிலும் தங்கி வருகிறது என்ற உயர் தத்துவத்தை உன்னிப் பார்க்க வேண்டுகிறது வேதாந்தம்: மனிதனை மனிடமிருந்து பிரித்து வைக்கும் மாயையின் மாய வேலையைத் தகர்த்தெறிந்து, எல்லோரும் ஒன்று என்ற ஒற்றுமை மனப்பாண்மையை அபேதபாவத்தை வளர்க்க வேண்டுகிறது வேதாந்தம்

ஜீவ ஐக்யத்தை, உணர்வின் ஒன்றுபட்ட தன்மையை உணருவதே மேலோர் பண்பு. எல்லா ஜிவர்களிலும் எல்லா மிருகங்களிலும் எல்லாச்செடி கொடிகளிலும் பிரிக்க முடியாத ஒரே ஆத்மனைக் காண முற்படுவதே செயற்கரிய செய்கையாகும்; அதுவே நல்லறிவுடமையுமாகும். எனவேதான் திருவள்ளுவா தெரிவிக்கிறார்:-

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும்-அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

இவவரிய மெய்பபொருளைக் கண்டு. மகிழ்ந்து குணமென்னும் குன்றேறி நின்றாது பெருமையினால்தான் உலகம் இயங்கி வருகிறதென்பது தாலோா கூற்று. அவ்வரிய



பெரியார்களது தரிசனமே மிக்க பலனைத் தருமென்றெண்ணி அவர்களை நாடிச்செல்வார்

வேதாந்தத்தின் இலட்சியமான ஒற்றுமையுணர்ச்சியில் விருபபு-வெறுப்புகள் கரைந்து விடுகின்றன; அங்கே தோன்றி நிற்கின்றது. உயரிய ஆனந்தம் ஒற்றுமையில் தான் ஆனந்தம் ஓங்கி நிற்கிறதென்ற உண்மையை உணர்ந்த பெரியார்களைக காண்பது அரிது. அத்தகைய பெரியார்கள் இன்னும நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை நாடிச்சென்று. அபேதத்தில் நிலவும் ஆனந்தத்தைப் பெற முயலவேண்டுவது நம்மவர் கடமை!

பாரத நாட்டின் பெருமை பழமையானது. அவ்வப்பொழுது பல பெரியார்கள் தோன்றி நல்லறத்தை, ஒற்றுமையை அன்பை நிலைநாட்டி வருகின்றனர் என்பதை உலகறியும்.

இற்றைக்கு இவ்வரிய பெருமையுடன் உலகனைத்திலுமுள்ள மக்களின் உயர் வழிகாட்டியாக, ஒற்றுமையின் உறைவிடமாக அன்பின் தோற்றமாக அமைந்து. சன்மார்க்கத் தந்தையாக அறிவெனும் ஜோதியாக அன்பரின் உள்ளத்தைத் துலக்கும உயர்குருவாக அமைந்து இமயமலைச் சிகரத்தில் வீற்றிருந்து அகில உலகத்தையும் ஒன்று படுத்தப் பாடுபட்டுவரும் இமயஜோதி ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் அபேத ஆனந்தமாக விளஙகி வருகிறாகள் அவர்கள் முன் சாதி, சமய. இன. நிற. மொழி. நாடு, முதலிய வேற்றுமை கட்கு இடம் கிடையாது. எல்லா வேற்றுமைகளும் சுவாமிகள் முன் நில்லாது நீங்கி வீடுகின்றன. சுவாமிகள் ஒற்றுமையின் உருவாகவே அமைந்து ஒற்றுமைக்கு வழி வகுக்கின்றாாகள் பல்வேறு மதத்தினர் பல்வேறு நாட்டினர் பல்வேறு நிறத்தினர். அனைவரும் சுவாமிகள் முன் ஒன்றுபட்டு நிற்கும் உயர் த்ன்மையைக் கண்டு மகிழாதவர் யாா? சுவாமிகளுடன் சின்னேரம் இருந்து விட்டு அவர்களுடன் அபேதமாக நிற்கும் ஆனந்த நிலையை அனுபவித்த பின் விடைபெற்றுச் செல்லும் அன்பர்கள் அனைவரும் கண்கலங்கி

சுவாமிகளைப் பிரிய மனம் வராதவராய்த் தேம்பித் தேம்பித் தாயைப் பிரிந்து செல்லும் சேயைப் போல அவதிப்படும் அபூர்வ நிலைமையைக் கண்டவர் அபேதத்தில் ஆனந்தம் நிலவி நிற்கும் உண்மையை உணருவது உறுதி.

எல்லோரும் இமயமலைக்குச் சென்றுச் சுவாமிகளின் தரிசனத்தைப் பெறும் வாய்ப்புப பெற்ரவர்களாக இருக்க முடியாது என்பதை அறிந்த கடவுள் தமிழ் நாட்டின் அருகிலுள்ள கோனத்தின் தலை நகரான திருவனந்த புரத்தில் மற்றோர் பெரியாரைத் தோன்றச் செய்திருக்கிறார் என்பதை அறிந்தவா ஆனந்தககளிப்பெய்துவர் என்பதில் ஆட்சேபனையுண்டோ?

அபேதத்தின் உறைவிடமாய். அன்பின் திருவுருவாய் பக்திரசத்தின் பூரணமாய்ச் சிறந்து விளங்கும் ஸ்ரீ சுவாமி அபேதானந்தரின தரிசனத்திற்கு விரைந்து செல்லும் மககள் பெரும்பேறு பெற்றவர்களேயாவர். சுவாமிகளின் சொற்கள் ஒவ்வொன்றும் அன்பர்களின் உள்ளத்தில் உயரிய பக்தியை வளர்ப்பதுடன், சுவாமிகளின் தரிசனமே அனைவருக்கும் ஆனந்தத்தை ஊட்டுகிறது. அபேதமாக விளங்கும் தன்மையில்தான் ஆனந்தம் தோன்ற முடியும் என்ற நியதிக்கொப்ப அபேதமாக விளங்கும் சுவாமிகளின் தொடர்பில் ஆனந்தத்தைத் தவிர மற்றெதையும் எதிர்பாக்க முடியாதல்லவா?

சமீபத்திலே நடைபெற்ற கோடி அர்ச்சனையில் பங்கு பெறப பக்தர்கள் பல்லாயிரவர் பலவிடங்களிலிருந்தும் பறந்து வந்தனர். வந்தவர் அனைவரும் மூன்று நாட்கள் தொடர்ந்து சுவாமிகளின் உயர் தொடர்பில் ஆனந்தமாக அமர்ந்த பின். சுவாமிகளிடம் விடைபெற்றுச் செல்லும் போது ஒவ்வொருவருடையவும் கண்களிலிருந்து வரும் கண்ணீரே அவர்களின் போன்மைத் தெரிவிக்கும் "வாருங்கள் உட்காரலாமே! சாப்பிடலாமே!" என்ற அன்புச் சொற்கள் அனைவரையும் பரவசத்திலாழ்த்திவிடும் தன்மையென விடைபெற்று வரலாமென்றெண்ணி சுவாமிகளிடம் சென்றால்.



இருந்து விட்டுப் போகலாமே! என்ற சொற்கள்கல்லுள்ளத்தவரையும் கசிந்துருகச் செய்யும்! தாயைப் பிரிந்த சேயின் நிலைமையை அடைகின்ற அன்பர்களின் அன்புக்கும் பக்திக்கும் பாத்திரமாக விளங்கும் ஸ்ரீ சுவாமி அபேதானந்தரின் புகழ் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சிறந்து விளங்கிச் சைதன்ய மகாப்பிரபுவின் திருவவதாரமாகத் திகழுகின்ற தனிச்சிறப்பை என்னவென்றுரைப்பது?! ஆம்! ஸ்ரீ சுவாமிகளின் தரிசனமே அன்பர்களின் உள்ளத்தைத் துலக்கி. ஆத்மதரிசனத்தை அளிக்கும் என்பது உறுதி.

—*—

## பண்பாடு

அறிவுப்பண்பாடு இதயப்பண்பாட்டுக்கு அடங்கியதாகவே இருக்க வேண்டும். தனித்து வாழ விரும்பும் பண்பாடு எதுவும் வாழமுடியாது.

தொழில் செய்யாத—தொழிலில் பயனாகை இல்லாத பண்பாடு பயனற்றதேயாகும். வாசிப்பதாலும் பேசுவதாலும் எழுதுவதாலும் மட்டுமே பண்பாடு அடங்கிவிடமுடியாது.

ஒரு தேசத்தின் பண்பாடு அதன் ஜனங்களுடைய இதயத்திலும் ஆன்மாவிலுமே குடிகொண்டிருக்கும் நம்மிடம் நாகரீகமும் பண்பாடும் சுயராச்சியமும் தேவைகளைப் பெருக்குவதால் வாரா. தேவைகளைச் சுருக்குவதாலேயே வரும். (காந்தி)


அறிவில் ஆர்வமுடையவர் தாழ்ந்தவரிடமிருந்தாயினும் அறிவுபெற நாணாதவர் இவரே பண்பாடுடையவர் (கன்பூஷியமதம்)

# கபீர் பஜன்

[ஹரிஹரராம்]

மை கு3லாம் மை கு3லாம் மைகு3லாம் தேரா, தூசாஹிப்3மேரா
ராமத4னீ ராஜ்த4னீ ராமத4னீ மேரா -- (மைகு3லாம்)
ரூப நஹீ ரங்க3 நஹீ ப3ரனன ஹீ ச2ாயா|
நிர்விகார. நிரஞ்ஜன, நிர்க்கு3ண ரகு4ராயா|| [மை]
ஏக் ரொடி தே3 லங்கே3ாடீ து3வார் தேர்ர பாயை|
காம க்ரோத4 சே2ாட3 கர்ஹரி கு3ண க3ாவை|| (மை)
மேஹர்ப3ான, மேஹர்ப3ான, மேஹர்கரோ தேரீ|
த3ாஸ கபீ3ர சரண க2ட3ா நஜா தே3கத தேரீ||

**பதவுரை** :- **தேரா**=உனது, உன்னுடைய; **ராம்**=ஹேராமா; **மை**=நான்; **கு3லாம்**=அடிமை, உனதடிமை; **தூ**=நீ, நீயோ: **மேரா**=என்னுடைய, **ஸாஹிப்(3)**=எஜமான்; **த(4)னீ**=செல்வம் வாழ்வு; **ராஜ்**=செயல், பெருமை; (எல்லாம் ராமா நீயேதான் எனக்கு); (ராமா=உனக்குத் தனிப்பட்ட) **ரூப்**=உருவம்; **ரங்க்(3)** நிறம் என்பது; **நஹீ**=இல்லை; **ப(3)ரனஹீ**=பக்தர்கள் எப்படி எப்படி உன்னை, உன் அழகை வர்ணிக்கிறார்களோ? அவ்விதமான; **ச(2)ாயா**=தோற்றந்தான் காட்டுகிறாய்; **ரகு4ராயா**=ஹே ரகுகுல திலகனான ராமனே; நீயோ, **நிர்விகார** = பேதபாவமற்றவன், பிரிவு எண்ணாதவன்; **நிரஞ்ஜன**=மாசில்லாத, குற்றமில்லாத; **நிர்கு(3)ண**=குணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட. குணாதீதனான வன்; உனது அடிமையான எனக்கு; **ஏக்**=ஒரு; **ரோடீ**=ரொட்டித் துண்டும்; **லங்கோடீ**=லங்கோடும்; (இடைத்துணி); **தே(3)**= கொடு, தா; **தோர**=உன்னுடைய; **து(3)வார்** = முன்னிலையில் சன்னதியில்; **பாயை**=அடைந்தேன்; **காம** = ஆசை, பற்று; **க்ரோத(4)**=கோபம் வெகுளல்; **சே(2)ாட்(3)கர்**=விட்டுத்தள்ளி: **ஹரி**=ஹே ஹரியே; **கு(3)ண** = [உனது] புகழை, பெருமையை; **க(3)ாவை**=பாடுவேன்; **மேஹர்ப(3)ான்**= தயவு செய்து; **தேரீ**= உன்னுடைய; மேகர்கரோ = அருளைக்கொடு, அருள்செய், **த3ாஸ கபீ3ர்**=தொண்டனான கபீர்; **சரணக (2)ட(3)ா**— (உன் அருளைப் பெற) காத்துநிற்கின்றேன். நஜர்—அருட்பார்வையால்' தே3கத்- என்னைப்பார், பார்த்து ஆட்கொள் ராமா!



# கடவுளைச் சரண்புகுதல்.

அடிமைநானே அடிமைநானே அடிமைநானுன் னடிமையே
அடியனென் எஜமான் நீயே [அடிமை]

அடியனென் வாழ்வு செல்வம் பெருமை யாவும் நீயே ராமா [அ]
உருவற்றாய், நிறமற்றாய், போற்றும் உருவே தோற்றுவை
பிரிவில்லாத மாசற்ற தூயவா ரகுநாதா -- [அடிமை]
ரொட்டித்துண்டும் லங்கோடுந்தா கிட்டினேனுன்சந்நதி
கெட்டகோபம் ஆசையுமின்றி, திட்டமுன்புகழ் பாடுவேன்(அ)
தயாள குணசீலனன்றோ தயை புரிந்தெனை யாளவா!

தாஸன் கபீர் சரணடைந்தேன் கடைக்கண் பாராய்தேவா [அ]
'ஹரிஹரராம்'

க்ருத்துரை:— ஹே ராமா! நீ என்னையாளும் எஜமானன். நான் உனதுஅடிமை. என்வாழ்வு தாழ்வு, சீர்சிறப்பு, செல்வம் பெருமை, எல்லாம் நீயேதான்! மெய்யன்பர்கள், உண்மைத் தொண்டர்கள் உன்னை எவ்வெவ்வாறு புகழ்கிறார்களோ நீ அந்தந்த உருவில் அவர்களுக்குக் காட்சியளித்து ஆட்கொள்கிறாய்! உனக்கெனத் தனியான, குறிப்பிட்ட உருவமோ, நிறமோ இல்லை. நீ பேத பாவம் அற்றவன், எல்லாவற்றையுந் தன்வசமாக்கி யாவற்றுளும் உன்மயமாக நீ இயங்குகிறாய். அதனால் எதையும் வேறு என்றுபிரித்துப் பாராத [ஒருவனே] என்ற ஏகபாவம் கொண்டவன். நீ களங்கமில்லாதவன். குணாதீதன். சுத்த நிற்குண சுயஞ்ஜோதி. ரகுகுலத்திலே மேன்மையுடையவன் நீதான். காமம், கோபம் முதலான ஆறு குணங்களையும் உதறித் தள்ளிவிட்டு. நான் உனது கல்யாணகுணங்களைப்பாடுவது என்ற உறுதியோடு உன் திருச்சன்னதி அடைந்துள்ளேன். என் மானங்காக்க ஒரு லங்கோடும் (முழந்துணி,) உன் தொண்டு செய்வதில் ஈடுபடும் எனது உயிர்நிலைக்க ரொட்டித்துண்டும் (பிடிசோறு) எனக்கு நீ தரவேண்டும். ஹே! கருணாமூர்த்தி! இவ்வடிமை உன்னையே சரணமாய், சஞ்சமாக அடைந்தேன். சற்று தயை காட்டிக் கருணை பொங்கக் கடைக்கண்ணால்ப்பார்த்து அருள் செய்—என கபீர்தாஸ்வேண்டுகிறார்.



## :: சுவாமி இராமதாசர் ::

—✠—

அன்பினிற் கண்டேன் ஐயநின்னை
அருளொளி கண்டேன் நின்பால்
என்பினை உருக்கும் உந்தன்
எழிலுரு கண்டேன் என்மனக்குருவே!
இன்பமென் இதையக் காட்டில்
இராமதாச நின்னையான் கண்டால்,
என்பெரும் குறைதீரு மலவோ?
என்னருட் குருவே என்ன!

## அன்னை கிருஷ்ணபாய்

——☼——

அன்னை நின்னருட் பார்வை வேண்டும்
அடியனேன் நின்னொளி காணவேண்டும்
என்னையே யானெண்ணும் ஞானம்வேண்டும்
இந்தஞாலமே யெனக்குப்பாலமா யமைய
-வேண்டும்
அன்னையின் அன்னை நீ-யேஆனந்த வெள்ளமே;
அருட்பெரும் ஜோதி கிருஷ்ணபாயே!
என்னையும் வந்துநின் திருவுருதாங்க
இக்கணம் அருள்புரி அமரத்தாயே!

—நா. சச்சிதானந்தன்.

### உலகெலாம் வாழுந் தமிழர்க்கு ஓர்

# வேண்டுகோள்!

**திருவள்ளுவர் திருநாளை ஆண்டுதோறும் ஒவ்வொரு வீட்டிலுங்கொண்டாடுக. இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாள் மே 22 வெள்ளிக்கிழமை (22-5-59).**

**தமிழ்மறைக்கழகத் தலைவர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் எம்—ஏ—பி-ஓ-எல்) அவர்கள் விடுக்கும் அறிக்கை**

எமது தமிழ்மறைக் கழகம் சென்றபல ஆண்டுகளாக வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாகத் தமிழ்கூறு நல்லுலகை மெல்லாம் கொண்டாடச்செய்து வருகின்றது. தமிழகம், இலங்கை வடஇந்தியா, மலாயா, சிங்கப்பூர், பர்மா, தென்னாபிரிக்கா, பீச் சித்தீவு, மொறிசியசு முதலிய பல நாடுகளிலும் வாழுந்தமிழர்கள் ஒன்றுபட்டுத் திருவள்ளுவருக்கு வைகாசி அனுடத்தில் விழா எடுக்கிறார்கள். கொழும்பு, சென்னை, திருச்சி, தெல்லி, சிங்கப்பூர், பி. பி. சி. [இலண்டன்] முதலிய வானொலி நிலையங்களும் எமதுமுயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி வருகின்றன.

ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளன்று தமிழர்கள் ஒவ்வொருவருடைய வீடும் விழாக்கோலம் கொள்ளல்வேண்டும் என்பதே எமதுகழகத்தின் நோக்கமாகும். எனவே உலகெலாம் வாழுந் தமிழர்களை ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளைத் தத்தம் வீடுகளிற் கொண்டாடுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம். இப்பெருஞ் செயலை நிலைநாட்டுதற்கு ஆவனசெய்தல் தமிழ்கூறு நல்லுலகெங்குமுள்ள தமிழ்ச் சங்கங்கள், மன்றங்கள் கல்விநிலையங்கள் முதலியவற்றின் முதற்கடமையாகும்.

சென்ற ஆண்டுகளில் எமது முயற்சிக்கு ஆதரவளித்ததுபோல் இனிமேலும் ஒவ்வோராண்டும் தமிழ் மக்களுககுத் திருவள்ளுவர் திருநாளை நினைவூட்டியும், சிறப்புமலர் வெளியிட்டும் ஊக்கமளித்தலே, தமிழ் மக்கள் நடத்தும் பத்திரிகைகள் இப்பெருந் தொண்டுக்குச் செய்யும் பேருதவியாகும்.

கி. பி. 1969-இல் திருவள்ளுவர் தொடராண்டில் ஈராயிரம் ஆண்டு நிறைவினை எங்குஞ் சிறப்பாகக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறோம். திருவள்ளுவர் தொடர் ஆண்டைத் தமிழர்கள் யாவரும் வழக்குக்குக் கொண்டுவருதலும் இன்றியமையாதது. திருக்குறள் இன்னும் மொழிபெயர்க்கப்படாத மொழிகளில், மொழி பெயர்ப்பித்தற்கு அம்மொழிகள் வழங்கும் நாடுகளில் வாழும் தமிழ்மக்கள் முயலவேண்டுமென்றுங் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற திருக்குறளைச் செய்தருளிய திருவள்ளுவருக்கு உலகெலாம் வாழுந் தமிழர் எவ்வித வேறுபாடுமின்றி ஒன்றுபட்டு ஆண்டுதோறும் திருநாளிற் பெருவிழா எடுக்கிறார்கள் எனும் புகழுரையை நிலைநாட்டுதற்கு உலகெலாம் வாழுந்தமிழர்கள் ஒன்றுபடுவோமாக. வாழ்க தமிழ்மறை! வளர்க தமிழினம்.

Registered at the G. P. O. as a News Paper M. L. 59/300

உ
நல்ல விநாயகர் துணை

## ஸ்ரீ முன்னேஸ்வரம்
## திருக்குளத்திருப்பணித் தரும விஞ்ஞாபனம்

திருவருள் நிறைந்த ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்ரத்தில் சிவதீர்த்தமென்ற திருக்குளத்திருப்பணிக்கு சுமார் 60,000 ரூபாய் வரையாகுமென மதிப்பிட்டு கருங்கல் வேலை நடந்து வருகிறது. இப்பெருஞ் சிவ கைங்கர்யத்துக்கு புண்ய சீலர்களனைவரும் தங்களாலியன்ற பொருளுதவி செய்து ஸ்ரீ வடிவாம்பிகாஸமேத முன்னைநாதப்பெருமான் திருவருள் பெற வேண்டுகிறோம்,

இங்ஙனம்
சி. பாலசுப்ரமண்யக் குருக்கள்,
தர்மகர்த்தா.

## வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு, முழங்கால்வாய்வு, இடுப்புவாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், கைகால்அசதி, பிடிப்பு, பசியின்மை, வயிற்றுவலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம்நெஞ்சுக்கரிப்புமுதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரணசக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம். **உபயோகிக்கும் முறை:-** இந்தச் சூரணத்தில் ½ தோலா அளவு எடுத்து அத்துடன் ½ தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும் காலை மாலை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக் கூட்டியும்குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய் நிறையச் சாப்பிடலாம். வாரம் ஒருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

*மூலிகையினால் தயாரிக்கப்பெற்றது*

*[பத்தியமில்லை]* தபாற்செலவு உட்பட டின் ஒன்று ரூபா 3-75.

*சாம்பு இண்டஸ்ரீஸ் சேலம் 2.* S. I.

*இலங்கையில் கிடைக்குமிடம்:*

**ஆத்ம ஜோதி நிலையம் : நாவலப்பிட்டி**

Printed by N. Muthiah at the Sri Murugan Press - Punduloya.
Published by N. Muthiah Athmajothi Niliyam - Nawalapitiya.